## தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள

# ரெயில்வே திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கப்படுமா?

### மக்களவையில் - டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, நவ. 30-

தமிழ் நாட்டில் நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை விரைவில் செயல்படுத்த போதுமான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளதா என்று மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

அவர் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

தமிழகத்தில் நிலுவையில் உள்ள மற்றும் செயல்படுத்தி வரும் ரயில்வே திட்டங்களுக்கு ஒன்றிய அரசு போதுமான நிதியை வழங்கியுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்?

தமிழகத்தில் ஐந்து ஆண்டு களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை உரிய காலத்தில் முடிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்? இல்லை என்றால் அதற்கான காரணங்கள்?

நிலுவையில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இதற்கு இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம்:

இந்திய இரயில்வேயின் திட்டங்கள் மண்டல இரயில்வே வாரியாக அனுமதிக்கப்பட்டு எடுக்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்கள் தெற்கு இரயில்வே (SR), தென் மத்திய இரயில்வே (SCR) மற்றும் இந்திய இரயில்வேயின் தென் மேற்கு இரயில்வே (SWR) மண்டலம் ஆகிய வற்றால் உள்ளடக்கப் பட்டுள்ளன.

இரயில்வே திட்டங்களின் நிதி ஒதுக்கீடு மற்றும் திட்ட வாரியான செலவுகள் மற்றும் மண்டல ரயில்வே வாரியான விவரங்கள் இந்திய ரயில்வே இணையதளத்தில் பொதுத்த ளத்தில் கிடைக்கின்றன.

2014 முதல் தமிழ்நாடு மாநிலத்தில் நிதி ஒதுக்கீட்டில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது:

இது 2009-14ன் சராசரி ஒதுக்கீடு ஆண்டுக்கு ரூ.879 கோடியாக இருந்தது.

தமிழ் நாட்டில் உள்ள ரயில்வே திட்டங்களை செயல்படுத்த 2023-24 ஆண்டு ரூ.6,080 கோடியும் 2024-25ல் ரூ.6,362 கோடியும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

01.04.2024 நிலவரப்படி, தமிழ் நாட்டில் ரூ. 33,467 கோடி செலவில் 22 ரயில்வே உள்கட்டமைப்பு திட்டங்கள் (10 புதிய பாதை, 03 கேஜ் மாற்றம் மற்றும் 09 ரயில் பாதை இரட்டிப்பு) மொத்த நீளம் 2,587 கி.மீ. செயல்படுத்தப் பட்டு வரும் பணிகள் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன.

மார்ச் 2024 வரை செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பார்க்கையில் 2587 கி.மீ. அளவில் 22 ரயில்வே கட்டுமான திட்டங்களில் ரூ. 7,153 கோடியில் 665 கி.மீ. அளவு, செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1922 கி.மீ. அளவு திட்டப்பணிகள் செயல்படுத்த வேண்டும்.

இரயில்வே நிலத்தை மாநில அரசு மூலம் கையகப் படுத்துகிறது. மாநில அரசு இழப்பீட்டுத் தொகையை மதிப்பீடு செய்து ரயில்வேக்கு அறிவுறுத்துகிறது. மாநில அரசின் கோரிக்கையின் பேரில், ரயில்வே இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட மாவட்ட நிலம் கையகப்படுத்தும் ஆணையத்திடம் டெபாசிட் செய்கிறது.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

---

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் - வேலூர் மாவட்டம்

# கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியத்தில் நலஉதவிகள்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கே.வி.குப்பம், நவ.30-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியத்தில் 27.11.2024 அன்று காலை முதல் மாலை வரை தமிழக அரசின் முதல்வர், கழகத்தின் மாநில இளைஞர் அணியின் செயலாளர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடபட்டது.

காலை 10.30 மணியளவில் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணியின் ஒருங்கிணைப்பில் பி.கே.புரம், அர்சுனாபுரம், கொசவன்புதூர், கீழ் ஆலாத்தூர் புதூர் போட்டூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு நடுநிலை, துவக்க பள்ளிகளில் உள்ள சுமார் 255 மாணவ மாணவிகளுக்கு. பேனா, பென்சில் ரப்பர், நோட்டு புத்தகம், போன்ற எழுது பொருள்களுடன் இனிப்பு அடங்கிய தொகுப்பை பிளாஸ்டிக் கவர்களில் வைத்து வழங்கப்பட்டது.

அன்று மதியம் பகல் 12.30 அணி அளவில் பி.கே. ஊராட்டியில் ஒன்றிய இளைஞர் அணியில் சார்பில் சுமார் 1000 பேருக்கு இனிப்பான, பிரிஞ்சி கலவை உணவு வழங்கப் பட்டது தொடர்ந்து அம்மணங்குப்பம், சேத்துவண்டை ஆகிய ஊர்களிலும் பிரியாணி வழங்கப் பட்டன.

மாலை 6.30 மணியளவில் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றிய சார்பில் மாச்சனூர் ஊராட்சியில், ஒன்றிய செயலாளர் கே.சீதாராமன் தலைமையில் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைப்பெற்றது, மாவட்ட பிரதிநிதி சி.மார்கபந்து வரவேற்புரை ஆற்றிட தலைமை கழக பேச்சாளர்களான, வயலூர் கிருஷ்ணைமூர்த்தி, கே.செல்வமணி, இவர்களுடன், வேலூர்

மாவட்ட கழக செயலாளார்.ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் மத்திய, கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்கள் லோ. இரவிச்சந்திரன் (ஒன்றிய குழு தலைவர்) இரா.முருகேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் வி.கே.ஆர் சுந்தரவடிவேலு, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் கே.வி.குப்பம் சி.கோபி பொதுக்குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி, முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் விடி ஜெயக்குமார், மாவட்ட தொழில் து அணியின் அமைப்பாளர் ராஜாக் குப்பம் முருகானந்தம் (தொகுதி பார்வையாளர்), ஒன்றிய அவைத்தலைவர் M. அசோக் குமார் (மாவட்ட கவுன்சிலர் ) ஒன்றிய பொருளாளர் சட்டுகல் பாஸ்கர், மாவட்ட பிரதிநிதி, கோ.இளங்கோவன், மாவட்ட திராவிட நட்பு கழக செயலாளர் சா.குமரன் மாவட்ட மருத்துவர் அணியின் துணை அமைப்பாளர் டாக்டர் கோவி. தூயவன்,

தொழில்நுட்ப அணியை சேர்ந்த இரா. முரளி, ஆசிரியர் இரா. இரவிச்சந்திரன் கா.சுரேஷ், காவியா, ஒன்றிய கவுன்சிலர் தா.இரவி, வீரா குமரன்,சே. வண்டை எஸ் டி. இரகு, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை து. அமைப்பாளர் கே.பி.கருணாநிதி. சிகா. ரமேஷ், ஒன்றிய இளைஞர் அணியின் அமைப்பாளர் ச.மோகன் (ஊராட்சி மன்ற தலைவர்), மாணவர் அணி இளைஞர் அணியை சேர்ந்த கரு. சிரிதர், எஸ் என் சாமுவேல். அ. குப்பம் ஷியாம்சுந்தர், ஆர்.ராஜிவ் காந்தி, சே. வண்டை. திரு ஞானம், ரகுராம், அய்யப்பன், மகேந்திரன்,

எம் காசி, வெங்கடாஜலம் ராஜேந்திரன், துரைசாமி த.சந்தானம், த. தினேஷ், ஆ.தங்கராஜ் எம். கே. பாண்டியன், ஜெ.கார்த்தி ஆகியோர் கலந்துக் கொண்டானர்.

இந்நிகழ்வுகள் முறையே, தொ.நு.. அணி, ஆசிரியர் இரவிசந்திரன், மாவட்ட பிரதிநிதி சி. மார்கபந்து, இளைஞர் அணியை சேர்ந்த ச.மோகன் ஆகிய இவர்கள் கே.வி. மேற்கு ஒன்றிய கழகத்துடன் ஒருங்கிணைத்து, முடிவில்

ஆ.தங்கராசு நன்றி கூறினார்.

---

# மும்பை மாநில தி.மு.க. இளைஞரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

### அலிசேக் மீரான் சிறப்புரை:

மும்பை, நவ. 30 -

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் அவர்கள் பிறந்த நாள் விழா இன்று (30-11- 24 - சனிக்கிழமை) மும்பை மாநில திமுக இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார் தலைமையில் தானே மாநகரில் உள்ள ஆதவ் பாக் அரங்கம் விஜய் அப்பார்ட்மெண்ட், டி விங், கிசன் நகர் தானே வில் மாலை சரியாக 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாநில செயலாளர் அலிசேக் மீரான் விழாச் சிறப்புரையாற்றுகிறார். துணை அமைப்பாளர் கி. வீரமணி வரவேற்றிட, மும்பை தி.மு.க. பொறுப்பாளர் கருவூர் இரா. பழனிசாமி, புறநகர் அவைத் தலைவர் ஜேம்ஸ் தேவதாசன், புறநகர் பொருளாளர் பி கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் வதிலை பிரதாபன், அ.இளங்கோ,

திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், அவைத் தலைவர் வே.ம. உத்தமன், இலக்கிய அணித் தலைவர் வே.சதானந்தன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச் சந்திரன், தி.மு.கழகப் பேச்சாளர் முகமது அலி ஜின்னா, இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ. ஜைனுல்லாபுதீன், இலக்கிய அணி பொய்சர் மூர்த்தி, இளைஞரணித் துணை அமைப்பாளர் இரா.கணேசன், இலக்கிய அணிப் புரவலர் எஸ்.பி. குமரேசன், டோம்பிவிலி கிளைக் கழகச் செயலாளர் வீரை சோ.பாபு ஆகியோர் வாழ்த்தி பேசுகின்றனர்.

விழாவில் பள்ளி மாணவர்களுக்கு இலவச புத்தகப்பை மற்றும் நோட்டுப் புத்தகங்களை தானே நகர திமுக முன்னோடி ஜாகிர் உசேன், கிளை செயலாளர் பாலமுருகன், இளைஞரணி துணை அமைப்பாளர் அமரன் உத்தமன, கிளைச் செயலாளர் சிவக் குமார் ஆகியோர் வழங்குகின்றனர்.

என்.வி. சண்முகராசன், எஸ்.பி.செழியன், எல்.பாஸ்கரன், க.ஜீவானந்தம், மெஹபூப் பாஷா, தமிழினநேசன், பெருமாள், பழனி, முஸ்தாக் அலி, தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி. பசுபதிநாதன், சி.சுடலையாண்டி, நம்பி, ராஜேந்திரன், மூர்த்தி, ஆழ்வார், ஜஸ்டின், வேல் முருகன், எம்.பொன்மணி, கு. தர்மலிங்கம்., சு. சேகர் சுப்பையா, மா. துரைராஜன், அ.கனகராஜ், அ.சேகர், அய்யாச்சாமி, செ. துரை, பி.கட்டிமுத்து, ப.கணேசன் ராஜன், அ. பாண்டு., வீ.கே.சிவா, வீ.முனியன், அ.தமிழ்செல்வன், இல. ராசாங்கம், மு.கோவிந்த ராஜ் , ஸ்டீபன் டேவிட் மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்க வுள்ளார்கள்.

இறுதியாக மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் உதய் பால முருகன் நன்றி உரை ஆற்றுகிறார்

விழாவிற்கான ஏற்பாடுகளை மாநில இளைஞரணித் தோழர்கள் சிறப்பாக செய்து வருகிறார்கள். அனைவரும் நிகழ்வில் கலந்து மகிழுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கி றார்கள்.

---

## 300க்கும் மேற்பட்ட இ-சேவைகளை கிராம மக்கள் பெறும் வகையில்

# தமிழகத்தில் உள்ள 4,453 வேளாண் கடன் சங்கங்கள் பொதுசேவை மையங்களாகவும் செயல்படும்!

### டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதில்!



புதுடெல்லி, நவ.30-

தமிழகத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? அந்த சங்கங்களை பொதுமக்கள் சேவை மையமாக மாற்ற எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித்ஷா அளித்த பதில்:

கிராமப் புறங்களில் இயங்கும் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக நாட்டிலுள்ள 67,930 வேளாண் கடன் சங்கங்களை கணினிமயமாக்கி ஒருங்கிணைக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ள பொதுவான மென்பொருள் மூலம் நடக்கும் இந்தப் பணிகள் முழுமை அடைந்தால், இந்த சங்கங்களின் செயல்திறன் பல மடங்கு அதிகரிக்கும். விரைவாக கடன் வழங்குதல், குறைந்த சேவைக் கட்டணம், பணம் கையாள்வதில் வெளிப்படைத்தன்மை போன்ற நன்மைகளை இதன்மூலம் பெற முடியும்.

வேளாண் கடன் சங்கங்கள், தங்களின் வர்த்தகத்தை விரிவுபடுத்தும் வகையில் பால் பண்ணை, மீன் பிடித்தல், பூக்கள் சாகுபடி, கிட்டங்கிகள் அமைப்பது, உணவு தானியங்கள், விதைகள் மற்றும் உரங்கள் கொள்முதல் போன்ற

பொருளாதாரத்தை மையப்படுத்திய இருபத்தைந்துக்கும் அதிகமான செயல்பாடுகளை கையாளும் வகையில் சங்க விதிகள் திருத்தி அமைக்கப்படும்.

பிரதமரின் விவசாயத் தகவல் மற்றும் விவசாயப் பொருட்கள் மையத் திடத்தின்படி, விவசாயிகளுக்கு விதைகள், உரம், பூச்சிக் கொல்லி போன்ற பொருட்களை வழங்கும் மையமாகவும், பிரதமரின் மக்கள் மருந்தகம் திட்டத்தின் கீழ் கிராமப்புர மக்களுக்கு குறைந்த விலையில் மருந்து, மாத்திரைகள் வழங்கும் மையங்களாகவும் இந்த வேளாண் சங்கங்கள் செயல்பட இருக்கின்றன.

அத்துடன், வங்கிப் பரிவர்த்தனை, ஆயுள் காப்பீடு, ஆதார் அட்டைக்கு விண்ணப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல், சுகாதாரம் தொடர்பான சேவைகள், மின்சாரக் கட்டணம் செலுத்துவது போன்ற 300க்கும் அதிகமான சேவைகளை வழங்கும் பொது சேவை மையமாக இந்த வேளாண் கடன் சங்கங்கள் செயல்படும். இதன் மூலமாக கிராமப்புற மக்கள் எளிதில் இந்த சேவைகளைப் பெற முடியும்.

நாட்டில் ஒட்டுமொத்தமாக 40,214 வேளாண் கடன் சங்கங்களும், தமிழகத்தில் 4,453 சங்கங்களும் இப்படி பொது சேவை வழங்கும் மையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தைப் பொருத்தவரை வேளாண் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு பதிவாளர் அலுவலகம் ஆகிய வற்றை கணினிமயப் படுத்த இந்த நிதியாண்டில் இதுவரை 28.2 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு ஒதுகியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அமித்ஷா பதிலளித்தார்.

---

# குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் - உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

### பத்தமடை சிந்தா பக்கீர் தலைமை! கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்பு!

குவைத், நவ.30-

தி.மு.கழகம் அயலக அணி குவைத் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழா பத்தமடை சிந்தா பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

ஆலஞ்சியார், காட்டூர் ஆறுமுகம், ஜியாவுதீன், காட்டுமன்னார் கோவில் சையத் முஸ்தபா முன்னிலையில் நடைப்பெற்ற விழாவில் முனைசந்தை சிக்கந்தர், பத்தமடை நாகூர், கறம்பகுடி ஜாபர்சாதிக், கறம்பகுடி அப்பாஸ், பத்தமடை பாஞ்சிபீர் முகமது, புதுவை சபீக்கான், திருவாரூர் குமார், விழுப்புரம் ஜஹாங்கீர், தஞ்சை ஷாத் அண்வர், பத்தமடை காட்டுபாவா, கொடவாசல் சதாம் உசேன், கொளத்தூர் கணேஷ், களந்தை மீரான், நஸ்ருதீன், சேத்துபட்டு கணேசன், பேராவூரணி ரபீக், ஹமீது, கறம்பகுடி அப்பாஸ், தவ்பீக், ஜான்பாஷா அப்துல்அஜீஸ், அருள் செல்வன், கார்த்தி, செந்தில் முருகன் ஈரோடுமுஸ்தபா, அம்மையப்பன் செல்வம், விஜய், கண்ணன், பிரேம், ஹசன்.

திராவிடர் கழகம் சித்தார்த்தன், மதிமுக மணிவாசகன், வி.சி.க.அன்பரசு, அழகர்சாமி, த.மு.மு.க.ஜபாருல்லாகான், த.வா.க.சாகுல்ஹமீது, ராஜா முகம்மது, விட்டுக் கட்டி மஸ்தான், ஸ்டார் ஆப் தமிழா ராஜேஷ், மற்றும் கலகலப்பு நண்பர்கள், மேலும் பல்வேறு அமைப்பினர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

மேலும் உதயநிதி நற்பணிமன்றத்தினர், விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க., தமிழர் வாழ்வுரிமைக்கட்சி, த.மு.மு.க., கலகலப்பு நண்பர்கள், மற்றும் பல்வேறு தமிழ் அமைப்பினரும் கலந்து கொண்டார்கள்.

---

# தி.மு.க. மாணவர் அணி

## பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு!

தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, தி.மு.க. மாணவர் அணி சார்பில் “மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா” இன்று 30.11.2024 (சனிக்கிழமை) மாலை 05.00 மணிக்கு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்கும் பொதுக்கூட்டம் காஞ்சிபுரம் காமராஜர் சாலை, பேருந்து நிலையம் எதிரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் காரணமாக அந்த பொதுக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டு, வரும் 06.12.2024 அன்று மாலை 05.00 மணிக்கு அதே இடத்தில் நடைபெறும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

“அண்ணா அறிவாலயம்,”
சென்னை-18.
நாள்: 29.11.2024

**சி.வி.எம்.பி. எழிலரசன்**, எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியத்தில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற நல உதவிகள் வழங்கும் விழாவில் மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். இதில் கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

## பென்னாகரத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த

# சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் - ரூ.3 இலட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 30-

தருமபுரி மாவட்டம், பென்னாகரம், அலகட்டு கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி உள்வட்டம், வட்டுவனஅள்ளி வருவாய் கிராமத்திற்குட்பட்ட, அலகட்டு மலை கிராமத்தைச் சேர்ந்த ருத்ரப்பா - திருமதி.சிவலிங்கி தம்பதியரின் மகள் கஸ்தூரி (வயது 14) என்பவர் 28.11.2024 அன்று பிற்பகல் அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் கீரை பறித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக விஷப்பாம்பு கடித்ததில், உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

## மாமல்லபுரம் - காரைக்கால் இடையே

# ஃபெங்கல் புயல் இன்று கரையை கடக்கிறது!

### வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, நவ.30-

வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் ஃபெங்கல் புயலாக வலுப்பெற்றது

சென்னைக்கு தென்கிழக்கு திசையில் சுமார் 340 கி.மீ. தொலைவில் FENGAL புயல் மையம் கொண்டுள்ளது

புதுச்சேரியில் இருந்து கிழக்கு தென்கிழக்கு திசையில் சுமார் 320 கி.மீ. தொலைவில் FENGAL புயல் மையம் கொண்டுள்ளது

நாகப்பட்டினத்தில் இருந்து கிழக்கு திசையில் 290 கி.மீ. தொலைவில் FENGAL புயல் மையம் கொண்டுள்ளது

மாமல்லபுரம் காரைக்கால் இடையே புதுச்சேரிக்கு மிக அருகில் இன்று பிற்பகலில் புயல் கரையை கடக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையைக் கடக்கும் பொழுது மணிக்கு 70 முதல் 90 கி.மீ வேகத்தில் காற்று வீசும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இன்று அதி கன மழைக்கு வாய்ப்பு உள்ளது என்றும்

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும்

ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்றும்

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்களில் இன்று அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் ஆய்வும் மையம் தெரிவித்துள்ளது.